# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி22 ஞாயிற்றுக்கிழமை (06-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 215


# திருமலை எம்.பி. தங்கத்துரை உட்பட ஐவர் குண்டுத் தாக்குதலில் மரணம்!

## கல்லூரி கட்டடத் திறப்பு விழாவின் பின்னர் வாசலில் நடந்த கோரம்

திருகோணமலை, ஜூலை 6

**திருகோணமலையில் நேற்று இரவு 7.40 மணியளவில் இடம் பெற்ற பெரும் குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருணாசலம் தங்கத்துரை, திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய அதிபர் திருமதி இராஜேஸ்வரி தனபாலசிங்கம் ஆகியோர் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்; பதினைந்து பேர் படுகாயமுற்றனர்.**

திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் புதிதாகக் கட்டப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தின் திறப்பு விழாவை முடித்துக் கொண்டு பாடசாலை வாசலுக்கு வந்து கொண்டிருந்தோர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இது குறித்து தெரியவருவதாவது:-

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பலியான ஐவர்

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த ஐவரின் விவரம் வருமாறு:

★ அருணாசலம் தங்கத்துரை (வயது 61)— நாடாளுமன்ற உறுப்பினர்.

★ திருமதி இராஜேஸ்வரி தனபாலசிங்கம் (வயது 49)— ஸ்ரீ சண்முக வித்தியாலய அதிபர். இச்சம்பவத்தில் இவரின் ஒரு கையும் உடற்பகுதியும் துண்டிக்கப்பட்டதாக தகவல் ஒன்று தெரிவித்தது.

★ எஸ். ஜோசப் — திருகோணமலை நாமகள் வித்தியாசாலை அதிபர்.

★ பெ. சி. கணேசலிங்கம் (வயது 54) — ஸ்ரீ சண்முக வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்.

★ நாடாளுமன்ற உறுப்பினர் தங்கத்துரையின் மெய்ப்பாதுகாவலர் அமிர்தலிங்கம். (உ-10-164)

## எம். பி. தங்கத்துரையின் இடத்துக்கு சம்பந்தர்

திருகோணமலை, ஜூலை 6

திருகோணமலை மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான அ. தங்கத்துரை நேற்று குண்டு வெடிப்பில் உயிரிழந்ததை அடுத்து அவரது இடத்துக்கு இரா. சம்பந்தன் எம். பியாக பதவியேற்க அழைக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

61 வயதான தங்கத்துரை தனது 32 ஆவது வயதில் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து தீவிர அரசியலில் ஈடுபட ஆரம்பித்தார்.

அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் பணியாற்றிய அவர், அந்தப்பதவியைத் துறந்து விட்டு, 1970 பொதுத் தேர்தலில் மூதூர் இரட்டை உறுப்பினர் தொகுதியில் தமிழரசு வேட்பாளராகக் குதித்து இரண்டாவது எம். பியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் 1981 இல்வடக்கு, கிழக்கில் மாவட்ட சபைகள் அமைக்கப்பட்ட சமயம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு திருகோணமலை மாவட்ட சபைத் தலைவரானார்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் அவர் போட்டியிட்டார். திருகோணமலை மாவட்டத்தில் ஓர் எம். பி. பதவியைப் பெறும் வாக்குகளே கூட்டணிக்குக் கிடைத்ததால் கூட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தை விட்டு தப்பியோடிய 10 ஆயிரம் பேரைத் தேடி வேட்டை

### கடந்த வெள்ளியன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 6

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களில் 20 ஆயிரம் பேர் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காலத்தில் மீண்டும் இராணுவத்தில் இணைந்துள்ளனர் எனவும் —

எஞ்சியுள்ள சுமார் 10 ஆயிரம் பேரைக் கைது செய்ய கடந்த வெள்ளியிலிருந்து நாடெங்கும் தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன எனவும் —

கொழும்பில் அறிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து மேற்கொள்ளும் தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்படுவோருக்குஎதுவித மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய சிலர் நாட்டில் இடம் பெற்று வரும் கொள்ளைகள், கொலைகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

தேடுதலின் போது கைது செய்யப்படும் இத்தகைய முன்னாள் இராணுவத்தினர் அனைவரும் இராணுவ நீதி மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்கு அதி உச்ச தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இராணுவ நீதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று தீவிர கெடுபிடி!

வவுனியா, ஜூலை 6

கரும்புலிகள் தினத்தைமுன்னிட்டு நேற்று வவுனியாவில் பாதுகாப்பு, தேடுதல், சோதனை நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக இருந்தன.

கொழும்பிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

திருகோணமலை நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தவிர வேறு பாரிய தாக்குதல் சம்பவங்கள் ஏதும் நேற்று இடம் பெற்றதாகத் தகவல் கிடைக்கவில்லை.

இதேவேளை வன்னியில் இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் கரும்புலி தின நிகழ்வுகள் பரவலாக இடம்பெற்றன. முக்கிய நிகழ்வு முத்தையன் கட்டில் இடம்பெற்றது.

கரும்புலிகள் தினத்தையிட்டு விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் விசேட செய்தி எதனையும் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது ஆனால் அத்தகைய செய்தி எதனையும் அவர் வெளியிட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு அறிவிக்கவில்லை. (உ-164)

## கோண்டாவிலில் 2 இளைஞர்கள் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 6

கோண்டாவில் ரயில் நிலையப் பகுதிக்கு அருகில் நேற்று மாலை 4 30 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் படையினரால் இரண்டு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் குறித்து மேலதிக தகவல்கள் தெரியவரவில்லை. (உ)

## கப்பல் சேவை குறித்து சரியான தகவல் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 6

காங்கேசன்துறை — திருகோணமலை கப்பல் சேவை குறித்து இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தெளிவான நிலை எதுவும் எட்டப்படவில்லை.

எனினும் இன்று கப்பல் சேவை நடைபெறாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் —

திருமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையே தொடர்ந்து சேவையில் ஈடுபடுவதாயின் தங்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என 'சஜிந்த' கப்பலின் கப்டன் தெரிவித்துள்ளதாக திருமலைச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே போன்ற ஒரு கோரிக்கையை திருமலைக்கும் மன்னாருக்கும் இடையே சேவை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சாவணையில் அமுக்க வெடி!

கொழும்பு, ஜூலை 6

சரவணையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் படையினரின் டிராக்டர் ஒன்று அமுக்க வெடியில் சிக்கியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். டிராக்டரில் இருந்த மற்றைய இரு சிப்பாய்களும் காயமடைந்தனர். (உ-5)

## மட்டு. எம். பிக்களின் பாதுகாப்பு குறைப்பு!

மட்டக்களப்பு, ஜூலை 6

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை காலமும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு நான்கு பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுவந்தனர்.

பொலீஸ் மா அதிபர் விடுத்த பணிப்புரையை அடுத்து கடந்த வியாழக்கிழமை முதல் இவர்களுக்கு இரண்டு பொலீஸாரே பாதுகாப்பு வழங்கிவருகின்றனர்.

பொலீஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டதை அடுத்து இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது வைபவங்களில் கலந்து கொள்வதை மட்டுப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10-21)

## தற்கொலைத் தாக்குதல் நபர்கள் கொழும்பில்?

தற்கொலைப் படையைச் சேர்ந்த மூவர் புதிதாக கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாகத் தகவல் கிடைத்திருப்பதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகை செய்திகள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் குண்டுத் தாக்குதல்களை நடத்த இவர்கள் திட்டமிட்டிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த வாரம் கொழும்பில் கைது செய்யப்பட்ட இரு பெண் புலிகளை விசாரணை செய்தபோது அவர்கள் இத்தகவலை வெளியிட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

ஊடுருவியுள்ள தற்கொலைப்படை உறுப்பினர்களைத் தேடிப் பிடிக்கும் பணியில் மூன்று பொலீஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுமாடு காணாமற்போய்விட்டது

பாஷையூர் திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சேர்ந்த ஜேசிஇனப் பசு மாடு ஒன்று 3-7-1997 வியாழக்கிழமை நண்பகலுடன் காணாமற் போய்விட்டது. அதன் அடையாளம்: சிவப்பு நிறம், கால்கள், வயிற்றில் வெள்ளை கலந்துள்ளது. கிட்டத்தட்ட 4' - 4½' உயரம். பெரிய தோற்றம். மஞ்சள் நிற மூக்குக் கயிறு போடப்பட்டுள்ளது. தயவுசெய்து கண்டவர்கள் அல்லது யாராவது வீட்டில் வந்து நின்றால் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

- பொறுப்பாளர்

கன்னியர்மடம்,
பாஷையூர்.

(48244)

## SCIENCE COLLEGE

குருநாதர் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

### 99 A/L

அலைகளும் அதிர்வுகளும்

சனி, ஞாயிறு — 4-00 — 5-00 மணி.

### 98 A/L - வெப்பவியல்

செவ். — 4.00-5.00 மணி, வெள்ளி — 5.00-6.00 மணி.

ஆசிரியர்:- திரு. சம்பந்தன்

(48237)

எமது புதிய வெளியீடு:
ரமேஷ் அரவிந் நடித்த
**வசந்த கால கொலைகள்**

அடுத்த வெளியீடு:
**சூரிய வம்சம்**

புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.

**வீடியோ விமல்,**
யாழ்ப்பாணம்.

(48245)

## சீட்டிழுப்பு திகதி நீடிப்பு

யாழ். கல்வி வலயம் I இன் நலன்புரிக் கழகத்தினால் நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு விற்பனைத் திகதி 30-6-97 இல் இருந்து 31-7-97 வரை நீடிக்கப்பட்டுள்ளது. 9-8-97 இல் சீட்டிழுப்பு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

— செயலாளர்

நலன்புரிக் கழகம்,
யாழ். கல்வி வலயம் I.

(48240)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
பழைய மாணவர் சங்கப்

## பொதுக்கூட்டம்

மேற்படி பாடசாலையின் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 18-07-97 வெள்ளிக்கிழமை காலை (புதிய நேரம்) 10.00 மணிக்கு அதிபர் திருமதி ச. யோகேஸ்வரன் அவர்கள் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

புதிய செயற்குழு தெரிவு செய்யப்படுவதுடன் அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறும். இதில் பழைய மாணவர்கள் அனைவரும் பங்கு பற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும்படி மிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

இ. இராஜயோகன் [G.S]
சங்கச் செயலாளர்

(47308)

## 80 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

அமரர்
**திருமதி தங்கரத்தினம் சாரங்கபாணி**

கல்வியறிவினால் நெஞ்சத்து நலம் யாம் என்னும் நினைப்பைத் தருகின்ற நடுவு நிலைமையுடன் தானும் வாழ்ந்து,

பதவிக்காக அன்று கல்வி - நீதிமானாக நீதியற்றவர்களிடமிருந்து தப்பி வாழவுமே கல்வி என்பதை அடிக்கடி கூறியதன் மூலம் மனிதப் பண்புடன் வாழ வைத்து என்னுயிருடன் கலந்துவிட்ட அருமை அன்னையை அன்னாரது 80 ஆவது பிறந்தநாளில் நினைவு கூருகின்றோம்.

அவரது நினைவாக 06-07-97 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 10.00 மணியளவில் நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் ஷண்முக அர்ச்சனை நடைபெறும்.

மகள்: சுசீலா சாரங்கபாணி
பேரன்: B.P. சாரங்கன்

பலாலி வீதி,
உரும்பிராய்.

(48235)

## நல்லூர் லயன்ஸ் பதவியேற்பு நிகழ்ச்சி

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் 1992 – 98 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு வைபவம், மர நடுகை நிகழ்வு, மதிய விருந்து மற்றும் கூட்டம் ஆகியவை இன்று காலை 10 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

லயன்ஸ் பிராந்தியம் Viii இன் பிராந்தியத் தலைவர் வி. தில்லைநாதன், திருமதி வே. தில்லைநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

முடிவுறும் நிர்வாகக் குழுவின் காலத்தில் பொதுச் சேவையிலும் கழக மேம்பாட்டிலும் உழைத்த உறுப்பினர்களுக்கு கழகத் தலைவர் ஏ. தங்கேஸ்வரன் பாராட்டு விருதுகளை வழங்குவார்.

## வெள்ளி விழா

தெல்லிப்பளை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழா நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் மானிப்பாய் ஆனந்தா வீதியிலுள்ள தெல்லிப்பளை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

## G.C.E. A/L

புதிய பாடத்திட்டம்

அரசாங்க
Model Paper Accounts
NIE ன் Maths

உட்பட எல்லாப் பாடமும் எம்மிடம் பெறலாம்.

**BOND**
யாழ்ப்பாணம்.

(48238)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

### கலைப் பீடத் தேர்வுகள் - 1995

1. முதலாம் ஆண்டுகலை/வர்த்தகம்/முகாமைத்துவம்/இராமநாதன் நுண்கலைத் தேர்வுகள் 11-8-1997இல் ஆரம்பமாகும்.
2. இரண்டாம் ஆண்டு பகுதி — I சிறப்புக் கலை/பொதுக்கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்/இராமநாதன் நுண்கலைத் தேர்வுகள் 15-9-1997இல் ஆரம்பமாகும்.
3. மூன்றாம் ஆண்டு பகுதி — II பொதுக்கலை/சிறப்புக்கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்/இராமநாதன் நுண்கலைத் தேர்வுகள் 1-10-1997இல் ஆரம்பமாகும்.
4. நான்காம் ஆண்டு பகுதி — III சிறப்புக் கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்/இராமநாதன் நுண்கலைத் தேர்வுகள் 15-10-1997 இல் ஆரம்பமாகும்.

இப்பரீட்சைக்குரிய நேரசூசிகளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளம்பரப் பலகையிலும் பரீட்சை அனுமதிகள் கிளைகளிலும் பார்வையிடலாம்.

பதிவாளர்

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### சிவபாக்கியம் முத்துமாணிக்கம்
(ஆலங்குளாய், சண்டிலிப்பாய்)

ஆலங்குளாய், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவபாக்கியம் முத்துமாணிக்கம் 03-07-1997 இல் (வியாழக்கிழமை) திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. கந்தப்பிள்ளை முத்துமாணிக்கத்தின் அன்பு மனைவியும், நவரத்தினம், ரத்தினம், நல்லம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரியும், இராஜசிங்கம் (கணக்காய்வு அதியட்சகர், திருமலை), சர்வேஸ்வரி, தயாபரசிங்கம் (ஜேர்மனி), பராபரசிங்கம் (முகாமைத்துவ பணிப்பாளர், இ. போ. ச. வவுனியா), ரவி (லண்டன்), துரைசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஞானம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியை), நாகேஸ்வரி, யோகேஸ்வரி, பற்றீஷியா, இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 6-7-97 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் அரசினர் விடுதி, திருமலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இ. டனராஜ்
மருத்துவபீட மாணவன்
யாழ்ப்பாணம்.
(பேரன்)

அரசினர் விடுதி,
அநுராதபுரச் சந்தி,
திருகோணமலை.

(48219)

திருமதி
### நாகரத்தினம் சந்திரசேகரம்பிள்ளை

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகரத்தினம் 5-7-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சந்திரசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான புத்தூர் மேற்கு நவக்கிரியைச் சேர்ந்த கனகசபாபதி – சரஸ்வதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற க. சுந்தரமூர்த்தியின் சகோதரியும், புஸ்பநாதன், சத்தியநாதன், குபேந்திரநாதன், கமலநாயகி (ஆசிரியை, ஹற்றன்), கெங்கேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திராதேவி, பூமகள், காலஞ்சென்ற டாக்டர் குருநாதன் மற்றும் திருச்செல்வம் ஆகியோரின் அருமை மாமியாரும், நிரஞ்சனா, ஹேமமாலினி, பிறேமலதா, மேதினி, நிவாகினி, வாகினி, உமா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-7-97 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. சத்தியநாதன்
(மகன்)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(48243)

### இராசா கனகசபை
(கார் சாரதி)

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த இராசா கனகசபை நேற்று 5-7-97 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 6-7-97 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து. குணேந்திரன்
(மருமகன்)

150, புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

(48242)

### திருமதி சபாரத்தினம் பாக்கியம்

வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த சபாரத்தினம் பாக்கியம் 04-07-1997 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு சபாரத்தினத்தின் (இளைப்பாறிய தபாலதிபர்) அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர்—இலங்கை மின்சாரசபை), சற்குணானந்தன் (செயலாளர்—வலிகாமம் மேற்கு பிரதேச சபை—சுழிபுரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகேஸ்வரி, சிவகாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியும், விவேகானந்தன், சியாமளா (லண்டன்), பிரதாபன் (கொழும்பு), ஜெகன்ராஜ் பரிமளா (கொழும்பு), சிவானந்தன் (டோவா), மோகனவரதன் (கொழும்பு), காலஞ்சென்ற தயானந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-07-1997இல் நடைபெற்றுப் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது என்பதை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
கா. ச. சற்குணானந்தன்
(மகன்)

''பாலானந்த பவனம்''
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(48228)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் விநியோக 'பில்' கணனியில் தயாரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

இலங்கை மின்சார சபையின் யாழ். குடாநாட்டுப் பாவனையாளர்களுக்கான பற்றுச் சீட்டுக்களைத் தயாரிக்கும் பணி கணனி மயப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதனால் இந்தப்பணி துரிதமாகவும், செம்மையாகவும் மேற்கொள்ளப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

தற்போது ஆரம்பத்தில் 4 ஆயிரம் பாவனையாளர்களுக்கு இம்முறையில் பற்றுச்சீட்டுகள் மாதம் தோறும் விநியோகிக்கப்படவிருக்கின்றன; எதிர்காலத்தில் பாவனையாளர் எண்ணிக்கை இரட்டிப்பாகும்போது அந்த வேலைப் பளுவுக்கு இக்கணனி மயப்படுத்தும் நடவடிக்கை இலகுவாக ஈடுகொடுக்கும் என்றும் —

மின்சார சபையின் கணக்குப்பகுதி துரிதமாகச் செயற்படக் கூடியதாக இருக்கும் என்றும் —

இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய பொறியியலாளர் எஸ். வல்லிபுரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஐ. ஐ. எஸ் (ISS) கணனிக் கல்வி நிறுவனத்தினால் — அந்நிறுவன நிர்வாக இயக்குநர் கே. விக்னேஸின் அனுசரணையுடன்— பற்றுச் சீட்டுக்களை தயாரிக்கும் பணி கணனி மயப்படுத்தப்பட்டிருக்கின்றது.


(உ)

# ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப அமைச்சரவை அனுமதி வழங்கியது

வடக்கு—கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணம், மேல் மாகாணம் ஆகியவற்றில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி இந்த மாகாணங்களில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் புதிதாக 2 ஆயிரத்து 770 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் என்று அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# இந்தக்குழந்தையை காப்பாற்றுங்கள்



அருகில் படத்தில் துடிப்புடன் காணப்படும் இந்தப் பிஞ்சுக் குழந்தையின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அதைக் காப்பாற்றக் கூடிய வாய்ப்பு உங்கள் கைகளில்தான் தங்கி உள்ளது.!

இக்குழந்தை — செல்வன் கனகலிங்கம் விமல்ராஜ் (வயது 3) — வருமானம் குறைந்த குடும்பத்தின் பிஞ்சு மகன். அவனுக்கு இதயத்தில் துவாரம்.

அவனது தாயார் திருமதி யோகேஸ்வரி கனகலிங்கத்துக்கும் (வயது 30) இதே வகை இருதய நோய்.

இந்த இருவரும் தவிர குடும்பத்தில் சகோதரனும் இளம் தந்தையும் இருக்கின்றார்கள்.

தாய்க்கும் ஒரு மகனுக்கும் உள்ள இருதயநோய்க்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டியுள்ளது. அச் சிகிச்சையை இலங்கையில் செய்ய முடியாதிருப்பதால் இந்தியா சென்று சிகிச்சையைச் செய்ய வேண்டியதே ஒரே ஒரு வழியே அவர்களுக்கு உள்ளது.

ஆனால் அதற்குத் தேவையான சில லட்சம் ரூபாவை பெற முடியாமல் சிகிச்சை பெற்று உயிர்களைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கின்றது இக் குடும்பம்.

சிறுவன் விமல்ராஜுக்கு ஏற்பட்டுள்ள இருதய நோயை அவசரமாகச் சுகப்படுத்தாவிட்டால் அடுத்து வரும் வருடங்களில் அவனின் உயிர் — வாழ்க்கை — நிச்சயமற்றதாகிவிடும் என்கிறார்கள் டாக்டர்கள்.

துடிப்புடன் ஓடி விளையாடும் இக் குழந்தை அடிக்கடி மயங்கி விழ ஆரம்பித்துள்ளது.

இக் குழந்தையை வாழ வைக்கும் முயற்சியில் மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் முழு மூச்சில் ஈடுபட்டிருக்கின்றது.

தொண்டு அடிப்படையில் சில லட்சம் ரூபாய்களைத் திரட்டி இந்தியாவில் சிகிச்சை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினர் முயற்சித்து வருகின்றனர்.

இச் சிகிச்சை நிதிக்காக மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் ஒரு சேமிப்பு வைப்புக் கணக்கை ஆரம்பித்துள்ளனர். அதன் இலக்கம் 12219.

இக் குடும்பத்தை வாழ வைக்க விரும்புவோர் நேரடியாக இக் கணக்கிற்கு பணம் செலுத்தலாம். காசோலை மூலம் பணம் செலுத்த விரும்பினால் "முகாமையாளர், இலங்கை வங்கி — மானிப்பாய், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழக சேமிப்பு வைப்புக் கணக்கு இல.-12219" என்று காசோலை எழுதி, சம்பந்தப்பட்ட வங்கிக்கு அல்லது மானிப்பாய் லயன்ஸ் கழகத்துக்கு அனுப்பி வைக்கலாம். மானிப்பாய் லயன்ஸ் கழகத் தொடர்பு முகவரி:- ஸி.கேசவராஜன் (தலைவர், மானிப்பாய் லயன்ஸ் கழகம்), அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி.

பிஞ்சுக் குழந்தை விமல்ராஜையும் அவன் தாயையும் காப்பாற்றும் பொறுப்பு உங்களிடம் உள்ளது. 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதை உணர்ந்து உங்கள் பங்களிப்பை நல்குங்கள்!

# தலிபான் அமைச்சர்கள் இருவர் விமானக் குண்டு வீச்சில் பலி?

இஸ்லாமாபாத், ஜூலை 6

ஆப்கானிஸ்தானில் எதிரணி நிலை ஒன்றின் மீது தலிபான் இயக்கத்தின் விமானப் படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் தலிபான் இயக்கத்தைச் சேர்ந்த இரு அமைச்சர்கள் உட்பட 40 பேர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில் இயங்கும் ஆப்கன் இஸ்லாமியச் செய்தி நிறுவனம் இத் தகவலை வெளியிட்டிருக்கிறது

ஆனால் பக்கச்சார்பற்ற சுயாதீன செய்தி நிறுவனங்கள் எதுவும் இச் செய்தியை நேற்று மாலை வரை ஊர்ஜிதம் செய்யவில்லை.

மைமானா என்ற நகரில் உள்ள தலியான் எதிர்ப்புப் படை நிலை மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும்—

அங்குள்ள சிறைச் சாலை ஒன்றின் மீது குண்டுகள் தாக்கியதால் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தலிபானின் அமைச்சர்கள் இருவரும் வேறு 38 தலிபான் இயக்கத்தவர்களும் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரணியினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தலிபானின் வெளியுறவு அமைச்சர் முல்லா முஹமது கௌஸ், சிவில் விமானத்துறை அமைச்சர் மௌலவி அக்பர் முகமட் மன்சூர் ஆகிய இருவருமே பலியான இரு அமைச்சர்களுமாவர். (ஐ-5)

## இரு பிரதமர்களினதும் படையினர் மோதல்

# கம்போடிய தலைநகரில் குண்டு வெடிப்பு! கலவரம்!!

நொம்பென், ஜூலை 6

கம்போடியாவின் தலைநகர் நொம்பென்னைச் சூழவுள்ள பகுதிகளில் சண்டை இடம் பெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

கம்போடியாவின் இரு பிரதமர்களின் ஆதரவு படையினரிடையே உருவாகி வந்த முறுகல் நிலை மோதலாக வெடித்துள்ளது.

சனிக்கிழமை காலை பெரும் குண்டு வெடிப்புச் சத்தம் ஒன்று நொம்பென் நகரை அதிரவைத்ததாக செய்திகள் வெளியாகின.

நொம்பென் விமான நிலையப் பகுதியைச்சுற்றிவளைக்க முதலாவது பிரதமர் நொரடோம் ரணரித்தின் படையினர் முயன்று வருவதாகவும்—

துப்பாக்கிச் சூட்டு மற்றும் தொடர்ச்சியான குண்டு வெடிப்புச் சப்தங்களும் நகரை அண்டிய பகுதிகளில் கேட்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கெமரூச் இயக்கத்தின் தலைவர் பொல்பொட் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட பின்னர் பிரதமர் நொரடோம் ரணரித்துக்கும் பிரதமர் ஹூன் சேனுக்கும் இடையே கடந்த சில வார காலமாக பலப்பரீட்சை ஏற்பட்டிருந்தது.

அதிகார கைமாற்றங்கள், கெமரூச் கெரில்லாக்களை தத்தமது படையணிகளில் இணைத்து படைபலத்தைப் பெருக்குதல் போன்ற நடவடிக்கைகளால் இரு பிரதமர்களிடையேயும் முரண்பாடான நிலை நீடித்து வந்தது.

தேர்தலை எதிர் கொள்ளத் தயாராகும் கம்போடியாவில் தங்கள் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்ள இரு பிரதமர்களும் முயன்று வருகின்றனர்.

முதலாவது பிரதமர் ரணரித் நொம்பெனில் இருந்து பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. இதே வேளை இரண்டாவது பிரதமர் ஹூன் சேன் விடுமுறையில் சென்றுள்ளார் என்றும் நொம்பெனில் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இந்நிலையில் அங்கு மோதல்கள் வெடித்துள்ளன. (ஐ)

## சிறுவனின் வயிற்றில் சிசு

கெய்ரோ, ஜூலை.6

15 வயது சிறுவன் ஒருவனின் வயிற்றில் சிசு ஒன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

பரபரப்பூட்டும் இந்தச் சம்பவம் எகிப்தில் நடந்துள்ளது.

கடும் வயிற்றுவலியினால் அவஸ்தைப்பட்ட பிரஸ்தாப சிறுவனை சோதித்த மருத்துவர்கள் முதலில் அவனது வயிற்றில் கட்டி ஒன்று இருப்பதைக் கண்டு பிடித்தனர்.

பின்னர் அறுவைச் சிகிச்சை மூலம் அதை வெளியே எடுத்தபோது அது கட்டி அல்ல; உடல் உறுப்புகள் வளர்ச்சிபெற்ற நிலையில் உள்ள சிசு என்பது தெரியவந்தது. சிறுவன் தனது தாயின் வயிற்றில் கருவாக இருந்த சமயம் அது இரட்டைக் கருவாக இருந்திருக்கும் எனவும் அதில் ஒரு கரு சிறுவனின் வயிற்றிலே ஒட்டி இருந்திருக்கலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## வடகொரியா உட்பட 4 நாடுகள் பேச்சு

நியூயோர்க், ஜூலை 6

கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் அமெரிக்கா, சீனா, வடகொரியா, தென்கொரியா ஆகிய நாடுகள் பேச்சு வார்த்தை நடத்த இணக்கம் தெரிவித்துள்ளன.

1953 ஆம் ஆண்டு கொரிய யுத்தம் முடிவடைந்த பின்னர் கொரிய தீபகற்பத்தில் சுமுக நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் முக்கிய திருப்பமாக இது கருதப்படுகிறது.

தற்போது பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கி இருக்கும் வடகொரியாவுக்கு மேற்கு நாடுகளில் உதவி கிடைக்க இந்[illegible] கிறது. (இ)

VACANCY

Vacancy exists in an International Organisation based in Jaffna for

A POST OF HOUSE-MAID

REQUIREMENTS:

Ability to speak and understand English previous experience in the relevant field.

AGE: Preferably Under 45

APPLICATIONS TO BE SENT TO:

THE ADMINISTRATION
P. O, BOX 141,
JAFFNA.

APPLICATIONS CLOSE ON: 13 - 07 - 97

(48200)

உரும்பிராய்

சிதம்பரசுப்பிரமணியசுவாமிகோயில்

கதிர்காம உற்சவம்

ஆரம்பம்: 05-07-97 சனிக்கிழமை மாலை 2.30

உத்தரவிழா 11-07-1997 வெள்ளிக்கிழமை மாலை 2.30

விசாகவிழா 15-07-1997 செவ்வாய்க்கிழமை மாலை 2.30

தீர்த்தம் 21 07-1997 திங்கட்கிழமை காலை 9 30

05-07-1997 சனிக்கிழமை முதல் தினந்தோறும் மாலை 2-30 மணிக்கு திருவிழா ஆரம்பமாகும்.

பரிபாலன சபையினரும், உபயகாரர்களும்.

(48226)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யால சரணாலய பூங்கா பகுதிக்கு உல்லாசப்பயணிகள்வருகைவீழ்ச்சி

## நாளாந்தம் இரண்டரை லட்சம் ரூபா இழப்பு

கொழும்பு, ஜூலை 6 யால சரணாலயப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவி உள்ளதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து அங்கு வருகை தரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வரவு வெகுவாக வீழ்ச்சியடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நாளாந்தம் இரண்டரை லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முன்பு பல நூற்றுக்கணக்கான உல்லாசப் பயணிகள் வருகை தரும் யால பகுதியில் தற்போது நாளொன்றுக்கு 10 முதல் 15 பேர் வரையானோரே வருகை தருகின்றனர். இதனால் இவர்கள் மூலம் பெறப்பட்டு வந்த வருமானத்தில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

இங்கு கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை 100 இல் இருந்து 30 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

உல்லாசப் பயணிகளை நம்பி அப்பகுதியில் தொழில் நடத்தி வாழ்ந்து வந்த சுமார் 100 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

(ஐ-3-150)


வாடிக்கையாளருக்கு ஒரு நற்செய்தி!
மீண்டும் யாழ். நகரில் தமது
சேவையை ஆரம்பித்திருக்கிறது

**கணேசா நகையகம்**

தங்கப் பவுண் நகை வியாபாரம்
இல. 194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்.

(48231)



சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ. உ)
தொழில் அடையாள அட்டை ரத்துச் செய்தல்

எமது சங்கத்தால் வழங்கப்பட்ட சகல தொழில் அடையாள அட்டைகளும் (JOB IDENTITY CARD) 08 - 07 - 97 முதல் செல்லுபடியற்றதாகும். சகல தொழிலாளரும் தமது அடையாள அட்டைகளை காரியாலயத்தில் 08 - 07 - 97 ஆம் திகதிக்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

-பதிற் பொது முகாமையாளர்.
(சி/ 1073) 03 - 07 - 97



அல்வாய் மாலைசந்தை
ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய
மஹோற்சவப் பெருவிழா

08 - 07 – 97 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

★ 08 - 07 - 97 செவ்வாய்க்கிழமை கொடியேற்றம் காலை 10 மணி
★ 12 – 07 - 97 பக்தோற்சவம்-மகேஸ்வரபூஜை
★ 16 - 07 - 1997 புதன் - தேர்த்திருவிழா
★ 17 - 07 - 97 வியாழன் தெட்ஷணாயன சங்கிராதி- தீர்த்தத்திருவிழா
★ 18 – 07 - 1997 பிராயச்சித்தம் வைரவர் மடை

தினமும் காலை 7 முதல் 11 மணி வரையும்
மாலை 3 முதல் 6-30 மணி வரையும்

விசேட அபிஷேகங்கள், பூஜைகள் நடைபெற்று சுவாமி வீதி வலம் வருவார்.

கொடியேற்றம் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ ந. தேவராஜ குருக்கள் தலைமையில் பிரம்மஸ்ரீ தேவ. இரவீந்திரக்குருக்கள் அவர்களால் நடத்தி வைக்கப்படும்.

அல்வாய் மாலைசந்தை
ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய
பரிபாலனசபை

(சி-1079)



45ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

அமரர் ஆறுமுகம் குமாரசூரியர்

அம்பாள் மழலைகள் கல்விப்பூங்கா மாணவியான
செல்வி கு. சயாளியின்

அன்புத் தந்தையார் ஆறுமுகம் குமாரசூரியர் அவர்களின் திடீர் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர் அபிவிருத்திச் சபை

சரசாலைமத்தி
சாவகச்சேரி.
[48182]


## சிறுவர் தின விழா

பண்ணாகம் அண்ணா கலை மன்ற சிறுவர் பாடசாலையின் 25ஆவது வருட சிறுவர் தினவிழாவும், விளையாட்டுப் போட்டியும் இன்று ஞாயிறு பிற்பகல் 2. 30 மணிக்கு விசவத்தனை முருகமூர்த்தி கோயில் முன் வீதியில் நடைபெறவுள்ளன.

(ஐ-28)

## விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 6 பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் ஞானக் குழந்தை முன்பள்ளி நிலைய வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிறு காலை 9.00 மணிக்கு பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகும்.

பாடசாலைப் பொறுப்பாசிரியை செல்வி ஜெயமலர் சுப்பிரமணியம் தலைமையில் இடம் பெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. தானையா கலந்து கொள்வார். (ஐ-15)


களஞ்சியம்
தேவை
(STORES)

யாழ். மாநகர எல்லைக்குள் அல்லது அண்மித்த பகுதியில் விசாலமான களஞ்சியம் குத்தகைக்கு அல்லது வாடகைக்குத் தேவை. தயவுசெய்து கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

இணைப்பாளர்,
இல. 11, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(48232)


# கஞ்சா வைத்திருந்த ஈழத் தமிழர் கைது!

சென்னை, ஜூலை 6 தமிழகத்தில் கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த ஈழத் தமிழர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 398 கிலோ கஞ்சா அண்மையில் கைப்பற்றப்பட்டது. இதனுடன் தொடர்புடையவர்கள் எனக் கைது செய்யப்பட்ட நால்வரில் இந்த ஈழத்தமிழரும் ஒருவர்.

நித்தியானந்தம் என்ற இந்தத் தமிழருக்கு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது. அபராதத் தொகையைக் கட்டத் தவறினால் கூடுதலாக ஒரு வருட கடுங்காவல் தண்டனை அளிக்கப்படும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(ஐ)

மந்திகை ஆஸ்பத்திரிக்கு

## நவீன வசதிகளுடன் கூடிய புதிய அம்புலன்ஸ் வண்டி

திருநெல்வேலி ஜூலை 6 பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு நவீன வசதிகளடங்கிய அம்புலன்ஸ் வண்டி வந்து சேர்ந்துள்ளது. கடந்த வாரம் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட இந்த அம்புலன்ஸ் வண்டியில் ''வயலர்ஸ்'' கருவி, எயார் கொண்டிசன் வசதி உட்பட பல நவீன வசதிகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எம். எஸ். எப். என்ற நாட்டு மருத்துவக் குழுவின் முயற்சியினால் இந்த அம்புலன்ஸ் வண்டி இங்கு எடுத்து வரப்பட்டிருக்கிறது.

(ஐ-135)


நினைவஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமை புரியும்
திருமதி சாந்தமலர் குமாரசூரியர்
அவர்களின் அன்புக் கணவர்

அமரர் ஆறுமுகம் குமாரசூரியர்

23-05-1997 ஆம் திகதி அகால மரணமடைந்ததையொட்டி 6-07-1997 இல் நிகழும் நினைவஞ்சலியில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்,
நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.
(சி/1070)



மனையியல்டிப்ளோமா பயிற்சி

பயிற்சி நெறிகள்

★ நவீன ஆடை தயாரித்தல், பூவேலை, சமையற்கலை, பெயின்ரிங், கேக் ஐசிங், சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம்.
★ பாடசாலையை விட்டு விலகியோர், சுயதொழில் வாய்ப்பைப் பெற முயற்சிப்போர் 20 - 07 - 97 இற்கு முன் விண்ணப்பிக்குக.
★ பயிற்சிகள் இலவசம்

- பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்.

7, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(48216)



சிகை அலங்கரிப்பாளர் அமைப்பு
முக்கிய பொதுக்கூட்டம்

வடபிராந்தியத்தில் உள்ள அனைத்து சிகை அலங்கரிப்பாளர்களையும் ஒன்றிணைத்து ஓர் அமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் சிகையலங்கரிப்பாளர்கள் நிலைய உரிமையாளர்கள், தொழிலாளர்கள், கிராமியத் தொழிலாளர்கள் ஆகியோருக்கான கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம்: நாவலர் மண்டபம்
(நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடி)
காலம்: 09 - 07 - 97 புதன்கிழமை காலை 10 மணி

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (P. L. O. T. E.) பிரசாரப் பொறுப்பாளர்
திரு. கிருபைராசா கலந்து கொள்வார்.

தொழில், தொழில் நிலையம் சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதால் அனைத்து நிலையங்களையும் மூடி அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

- அமைப்பாளர்கள்.
(48229)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிஷ்டை ஆராதனை அழைப்பு

''என் கண்களும் என் இதயமும் எப்பொழுதும் இவ்வாலயத்தின் மேல் நோக்கமாயிருக்கும்.''
II நாளாகமம்: 7:16

தேவ கிருபையாலும் தேவஜனங்களின் ஆதரவாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள எமது

**எபநேசர் ஜெப ஆலய**

**★ பிரதிஷ்டை ஆராதனை ★**

நாளை திங்கட்கிழமை ஜூலை 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடத்த தேவகிருபை பெற்றிருக்கின்றோம். இவ் ஆராதனையில் கலந்து சிறப்பித்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

போதகர், ஊழியர்கள், சபை மக்கள்,
எபநேசர் ஜெப ஆலயம்.
கனகரட்ணம் வீதி,
வட்டுக்கோட்டை.

(48207)

## 45ஆம் நாள் நீங்காத நினைவலைகள்



அவனியில் உதிப்பு: 25—02—1961

அநியாய அழிப்பு: 23—05—1997

### ஆறுமுகம் குமாரசூரியர்
(சுரேஸ்)


அப்பா என அழைக்கும் மழலைக் குரல்
கேட்கவில்லையோ
அப்பா வரும் வழி பார்க்கும் செல்வங்களை
மனம் மாறச் செய்வதோ
அநியாய வழியில் எமைவிட்டுப் பிரிந்ததேனோ
ஆற்றமுடியாத துயரினிலே எம்மையெல்லாம்
அமிழவிட்டு
ஆவி பிரிந்ததோ - ஐயா
ஆறுமோ நம் துயரம் தேறுமோ எம் மனம்?

அன்னாரது பிரிவால் துயருறும்:
மனைவி, குழந்தைகள், தாய்,
சகோதரன், உறவினர்கள்.

சரசாலை மத்தி,
சாவகச்சேரி.

(சி/1077)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்
(06 - 07 - 1997)



மண்ணில்: 01 — 01 — 1944

விண்ணில் 06 — 06 — 1997

### அமரர் கந்தப்பு பரிபாலசிங்கம்
(இலைப்பாறிய விற்பனைத் திணைக்கள முகாமையாளரும், முன்னாள் திக்கம் வடிசாலை களஞ்சியப் பொறுப்பாளரும்)

எமது அன்புத் தெய்வம் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு நேரிலும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், இறுதிக்கிரியைகளின் போது உடனிருந்தும் ஆறுதல் கூறிய அனைவர்க்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (06 - 07 - 97) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்

'வளர்மதி'',
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(48201)

## அமைதிக்கான கூட்டுப் பாடல் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 6

பாடசாலை மாணவர்களிடையே சாந்தி அமைதி சார்பான கூட்டுப்பாடல் போட்டி நிகழ்ச்சி ஒன்றை நடத்தி அதில் வெற்றியீட்டும் நிகழ்ச்சியை ரூபவாஹினியில் ஒளிபரப்புச் செய்ய திட்டமிடப்பட்டிருப்பதாக யாழ். வலயம்- 1 இன் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

'யுனெஸ்கோ' ஆதரவில் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தத்தமது மாணவர் விவரங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு வலயக் கல்விப்பணிப்பாளர்களிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டுப் பாடல் நிகழ்ச்சி 15 முதல் 20 நிமிடங்களைக் கொண்டதாகவும், சாந்தி, அமைதி, சகிப்புத்தன்மை என்பனவற்றை முன்னெடுக்கும் நோக்குடையவையாகவும் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## 30 குடும்பங்கள் வருகை

குருநகர், ஜூலை 6

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக 30 குடும்பங்களைச் சேர்ந்த 82 பேர் வியாழக்கிழமை குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர். (ஐ-51)

## சிறுவர் பூங்கா புனரமைப்பு

திருநெல்வேலி, ஜூலை 6

மானிப்பாய் — ஆனைக்கோட்டை பிரதான வீதியிலுள்ள சிறுவர் பூங்கா புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. வலி. தென் மேற்கு பிரதேச சபையின் தலைமைச் செயலகம் இதனைப் பராமரித்து வருகின்றது. (ஐ-135)

## 2 முகாம்கள் மூடப்பட்டன

வவுனியா, ஜூலை 6

திருமலை மாவட்டத்தில் தம்பலகாமம் கோயிலடியிலும், பாலம்போட்டாறு பத்தினி அம்மன் கோயிலடியிலும் அமைந்திருந்த இரு இராணுவ முகாம்கள் மூடப்பட்டிருப்பதாக ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்துள்ளது. (ஐ-10-164)


### பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. தபால் வழியில் பயிலலாம். கடைசித் தகைமை க.பொ.த.(சா/த) தகைமை கூடியவரும் பயிலமுடியும்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**

20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(48198)



**O/L**
**PAPER CLASS**

கணிதம்
திரு. தயாளன்

தமிழ்
திரு. திருஞானம்

**SHAMROCK**

(48220)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உரும்பிராய் ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும்,
உரும்பிராய் ஞான வைரவ கோயிலடி
பொதுப்பணி மன்றங்களின் ஆலோசகரும், காப்பாளருமாகிய

### திரு. அ. சு. த. கிருஷ்ணராசா
அவர்கள்

யாழ்ப்பாணமாவட்ட சமாதானநீதிவானாக நியமனம் பெற்று, கௌரவிக்கப்பட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சி அடைகின்றோம். அவர் பதவியேற்றுள்ளதையொட்டி அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர் தனது பொதுப்பணி வாழ்க்கையில் மேலும் சிறந்து பல்லாண்டு புகழோடு வாழ ஞான வைரவப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

உரும்பிராய் ஞான வைரவ சுவாமி கோயிலடி
பொதுப்பணி மன்றங்கள்.

(48222)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு: 29 — 10 — 1925

இறப்பு: 17 — 06 — 199(

கொழுவியங்கலட்டியைச் சேர்ந்தவரும், மயிலிட்டி கிராமசபை முன்னாள் உறுப்பினருமான

### இளையதம்பி செல்லத்துரை

அன்புத் தெய்வமே! ஆருயிர்க் கணவரே! ஆசை அப்பாவே! அன்பு மாமாவே! பாசமிகு தாத்தாவே! எங்களையெல்லாம் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்துவிட்டீர்.


உங்கள் ஆத்மா சாந்தியடைய கொழுவியங் கலட்டி சித்தி விநாயகரை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

காங்கேசன்துறை வீதி,
தொட்டியாலடி,
உடுவில், சுன்னாகம்.

(48177)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைக்கு: 1936 — 05 — 19

ஆண்டவனுக்கு: 1996 — 07 — 06

### தியாகராசா அரசு
(கட்டட நிபுணர் — பெயின்ரர்)

அரசு என்று அன்பாய் அழைக்கப்பட்டாய்
அன்பாய் எமக்கு அனைத்தும் தந்தாய்.

ஆணை என்பதை நாம் அறியோம்
ஆண்டவன் என்பது நீ எனக் கொண்டோம்.

ஆனாலும் எம்மை விட்டகன்றாய்
ஆனந்தம் என்பதை நாம் இழந்தோம்.

ஆறுதல் சொல்ல யாருமில்லை
ஆண்டு ஒன்று முடிந்ததையா.

பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், மருமகன்.

957/6, சென். ஜோசப் வீதி,
வளன்புரம்,
கொழும்புத்துறை.

(48211)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

தரமான புதிய மிருதங்கம், தபேலா, டோல்கீ என்பன விற்பனைக்குண்டு. பழைய வாத்தியங்கள் சிறந்த முறையில் சீர் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: க. இராசநாயகம், 82/16, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். [48197]

பருத்தித்துறை, தும்பளை வீதியில் (4ஆம்குறுக்குத்தெரு சந்தியில்), சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. விஸ்தீரணம் நிலப்பரப்பு 3, குளி 16. தொடர்பு: சி. அழகையா, தும்பளை வீதி, பருத்தித்துறை. [48118]

**தவறிவிட்டது**

ஆனைப்பந்தியில் சண்முகலிங்கம் அசோக்குமார் ஆகிய எனது விசேட, பாடசாலை அடையாள அட்டைகள் யாழ். இந்துக்கல்லூரிக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அம்பாள் வெதுப்பகம், ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் [48210]

பலாலி, சிவபாதம்-பூமலர் என்ற முகவரியைக் கொண்ட அடையாள அட்டை உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பேர்ஸ் மட்டுவில் – புத்தூர் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் டாக்டர் பே. பிலிப்ஸ் மட்டுவில் வடக்கு அல்லது தம்பு – உணவகம் சந்தை உட்புறம் சாவகச்சேரி. எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [கி/1078]

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

சைச்சங்கிலி ஒன்று மானிப்பாய் 'லக்கிகவுசில்' 26-6-97 இல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் மானிப்பாய் லக்கி கவுசில் தொடர்பு கொள்ளவும். [47307]

**இரும்பு**

B.M.C. வில்தகடு, கௌசிங், றிம் கொள்கலன்கள், இரும்புத்தகடு. மரம் அரியும் வாள் பட்டடையுடன் விற்பனைக்குண்டு. 'மில்க்வைற்' 525/2,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/1065]

**தேவை**

யாழ். மாநகர எல்லைக்குள் வீடுகள், காணிகள் உடன் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: S. பஞ்சரெட்ணம். மே/பா K S. முத்துலிங்கம். 206, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [48218]

உதவியாளர் தேவை. கலைஞானி அரும்பொருட் காட்சிச் சாலையில் சிதைவு பெற்ற பொருள்களை ஒழுங்குபடுத்துவதற்கு உதவியாளர் தேவை. (இருபாலாரும் விரும்பத்தக்கது) புதன்கிழமை (09-07-97) காலை 10. 00 மணிக்கு நேரில் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்:- பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி. [48224]

**வீடு வளவு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கந்தர் மடம் பழம் வீதியில் இரண்டு பரப்புடன் வீடு வளவு உடனடியாக விற்பனைக்கு உண்டு. பல்கலைக் கழகத்திற்கு மிகவும் அருகில் நல்ல சுற்றாடல். தொடர்பு: சத்தியபாலன், 73, பழம் வீதி, கந்தர்மடம். [48168]

# மனமார்ந்த அஞ்சலி

கிளிநொச்சி நீதிவானும் சாவகச்சேரி
மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய

## K. C. ஜெயராஜ தேவா

அவர்களின் திடீர் மறைவை அறிந்து அதிர்ச்சியும் துயரும் அடைகின்றோம். அவரின் இழப்பால்துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.


மாவட்ட நீதிபதி, மாவட்ட நீதிவான்,
நீதிமன்ற உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள்.

மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி. (சி-1075)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

''சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''

பிறப்பு: 10 – 05 – 1923



இறப்பு: 07 – 06 – 1997

## தளையசிங்கம் திருஞானம்


(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

அன்புடன் எமை வளர்த்து ஆளாக்கி மண்மீது
பண்போடு வாழவைத்த பாசமிகு தந்தையே
மண்ணோடு நீங்கள் மறைந்தாலும் எம் மனதில்
நீங்காது நிறைந்திருக்கும் உங்கள் நினைவு.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகளும், குடும்பத்தினரும்.

38 கோயில் வீதி ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (48173)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி கணேசலிங்கம் மகாலட்சுமி

தோற்றம்: 21–02–1947
மறைவு: 06–06–1997

வெண்மதிபோல் ஒளியுடைய திருவுருவே!
விண்ணுலகை விரும்பி நீ விரைந்து தான்
பறந்ததேனோ?
அம்மா என அழைத்துவிட்டால் உன் உள்ளம்
அணைத்தெடுக்கும்
அம்மா என அழுகிறோம் உன் காதில் கேட்கலையோ?
பேதலித்துத் தவிக்கின்றோம் பெற்றவளே நீ எங்கே
பேசாது மாரடைப்பால் மறைந்துதான் சென்றீரோ?
மகாலட்சுமியாய் என் மனையில் கொலுவிருந்தீர்
மாசற்ற குலவிளக்கே பேசாது சென்றாயோ?
உள்ளத்தமர்ந்திருந்த தெய்வமே போய்விட்டீர்
உள்ளமினி உள்ளமல்ல உடைந்த பெரும்பாறையம்மா
நீ பெற்ற மும்மலரில் ஒரு மலரை ஆண்மகவாய்
கொள்ளியிட வேண்டும் என்றா பெற்றெடுத்து
வளர்த்தாயோ?
பாசத்தின் குரல் ஓய்ந்து ஒரு திங்கள் ஆனதுவே
ஆத்மாவின் சாந்தி பெற ஆண்டவனை
வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்.

456, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். (48213)

# விசேட அடையாள அட்டைகள் பொது மக்கள் கவனத்துக்கு பிரதேச செயலக முறைப்பாடுகள் பணிபீடம்

''யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு ஆகியபிரதேச செயலகங்களைச் சேர்ந்தவர்களுக்கான பிரதேச முறைப்பாடுகள் பணிபீடம் விசேட அடையாள அட்டை அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது (07 - 07 - 1997 — 31 - 07 - 1997). தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மக்கள் உடுவில் பிரதேச செயலகத்திலும், பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மக்கள் சாவகச்சேரியிலும், மருதங்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மக்கள் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலும் முறைப்பாடுகளைச் செய்து கொள்ளலாம். மற்றைய பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்கள் தத்தமது பிரதேச செயலகத்தில் முறைப்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.

கருத்திட்ட முகாமையாளர் வி அ. அ.,
ஆட்பதிவுத் திணைக்களக செயலகம்,
யாழ்ப்பாணம். (சி/1074)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

அவதாரம்: 17 – 06 – 1947



அமரத்துவம்: 06 – 06 – 1997

## அமரர் பொன்னர் கந்தையா

(இராமலிங்கம்)


பெரும் புயலாய் வீசுதைதயா உம் நினைவு!
யாரும் அறியாத இடம் சென்றீரே.
ஊரே கலங்குதையா உம் பிரிவால்
பாரினில் பார்ப்போமா இனி உம்மை?
ஆயிரம் ஆண்டானாலும் ஆறாதையா
உம் நினைவுகள்

குடும்பத்தினர், உறவினர்.

நாவற்குழி. (47304)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 06 – 06 – 1943



மறைவு: 07 – 06 – 1997

## திருமதி தவமணி கிருஷ்ணசாமி

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு''
பண்பின் உறைவிடமாய்ப் பாசத்தின் இருப்பிடமாய்
கணவனே கண்கண்ட தெய்வமென்று திகழ்ந்த
தாங்கள்
திடீரென எம்மைவிட்டுப் பிரிந்ததினால்
ஏற்பட்டதாக்கம்
இன்னமும் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை.
''ஆறாது ஆறாது அழுதாலும் தீராது
ஆனாலும் வழியென்ன தாயே''

எங்கள் அன்புத்தெய்வத்தின் இறுதிக்கிரியைகளிற் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பி ஆறுதல் மொழி கூறியோருக்கும், வேறு பலவழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் முதற்கண் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு 07-07-1997 ஆம் திகதி திங்கட்கிழமையன்று எமது இல்லத்தில் அன்னவரின் ஆத்மசாந்திக்காக நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
அன்புக்கணவரும், பிள்ளைகளும்.

வேவில்வளவு,
வல்வெட்டி. (48199)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இவை, தடைகளே

கொழும்பு நகரிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் தமிழர்களைக் கண்டபடி கைது செய்து துன்புறுத்தும் கொடுமை மீண்டும் வேக அலையாகப் பொங்கத் தொடங்கியுள்ளது. மிகக் குறிப்பாக வடக்கு - கிழக்கில் இருந்து முக்கிய, அவசர அலுவல்களுக்காகக் கொழும்பு செல்வோரைப் பொலீஸார் மணந்து பிடித்துக் காரணம் எதுவும் தெரிவிக்காமலே அள்ளிச் செல்கின்றனர். வடக்கு — கிழக்கில் இருந்து கொழும்பு செல்பவர்கள் இளைஞர், யுவதிகள் என்றால் கேட்டுக்கேள்வியில்லை. அவர்கள் எல்லோருமே கொழும்பில் குண்டு வைக்க வந்தவர்களாக, தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்களாகச் சந்தேகிக்கப்பட்டு அள்ளிச் செல்லப்படுகிறார்கள்.

வடக்கு - கிழக்கிலிருந்து கொழும்பு செல்வோரைக் கைது செய்யும் ''ஒப்பரேசன் அரெஸ்ட்'' (கைது செய்யும் தாக்குதல்) கடந்த வாரம் மிக உக்கிரமாக நடந்திருக்கிறது; மேலும் தங்குதடை இன்றித் தொடர்கிறது.

குறிக்கப்பட்ட லொட்ஜ் ஒன்றில், தங்கியிருந்த வடமராட்சியைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களை இரகசியப் பொலீஸார் கைது செய்தார்கள். அத்தோடு நிற்காமல் அங்கு தங்கியிருந்த குழந்தைகள், பெண்கள் உட்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட அப்பாவிகளை வெளியே அநாதரவாக விட்டுவிட்டு லொட்ஜை மூடி சீல் வைத்தார்கள் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது போன்ற அட்டூழியங்கள் தமிழர்களைச் சந்தேகப் பிராணிகளாகப் பார்ப்பதோடு மட்டுமன்றி, அவர்கள் வெளிமாவட்டம் ஒன்றில் தமக்கு வசதியான ஓர் இடத்தில் தங்கும் அடிப்படை உரிமையையும் பறிக்கின்றன.

கொழும்பு நகரில் தமிழர்களைக் கண்டபடி கைது செய்வதும், பொலீஸ் நிலையத்தில் அடைத்து வைப்பதும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு காலத்தில் தொடங்கப்பட்டது; இன்னமும் தொடர்கிறது. பல அதிகாரிகளைப் பெரும் பணக்காரர்களாக்கி இருக்கிறது. விடுதலைப் புலிகள் கொழும்புக்குள் ஊடுருவி விட்டார்கள் என்று செய்திகளை உலாவவிட்டு ''ஒப்பரேஷன் அரெஸ்ட்'' அடிக்கடி ஒப்பேற்றப்படுகிறது!

இந்த அநீதிகளையும் தொல்லைகளையும் ஒழிப்பதாக முழங்கித்தான், ஜனாதிபதி சந்திரிகா தென்னிலங்கை வாழ் தமிழர்களின் வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டினார். ஆனால் மூன்று வருடங்கள் கழிந்தும் ...

ஒரு தடவை கைதாகி சந்தேகத்துக்குரியவர் அல்லர் என்று விடுவிக்கப்படுவோருக்கு அதற்கான அத்தாட்சிப் பத்திரம் தானும் வழங்கும் மிகச்சிறிய ஆக்கபூர்வமான நடவடிக்கை கூட இன்னும் நடைமுறைக்கு வரவில்லை!

அரசின் இந்த அசமந்தமும், பொலீஸாரின் போக்கும் தமிழர்கள் கொழும்பில் வாழக்கூடாது; தமிழ்ப் பகுதிகளில் இருந்து, அவர்கள் கொழும்பு செல்லக்கூடாது என்று மறைமுகமாகத் தடை விதிப்பதன்றி வேறல்ல!

# எஞ்சிய 7 கப்பல் சிப்பந்திகளையும் பார்வையிட செஞ். குழு முயற்சி!

யாழ்ப்பாணம், ஜூலை 6

மன்னார் பேசாலைக் கடற்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தீயிட்டுக் கொளுத்தப்பட்ட ''மிஷன்'' கப்பல் மாலுமிகள் குழுவைச் சேர்ந்த மிகுதி ஏழு பேரையும் இயன்றளவு விரைவில் நேரில் சென்று பார்வையிடுவதற்கு செஞ்சிலுவை சர்வதேசக் குழு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும்—

செஞ்சிலுவைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொழும்பு அலுவலகத்தினால் இம் மாதம் 4 ஆம் திகதி வெளியிடப்பட்ட உத்தியோக பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1-7-97ஆம் திகதி மன்னார் தீவுக்கு அப்பால் நடைபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பக்கச் சார்பற்ற நடுவராக இருந்து ''மிஷன்'' கப்பலில் பணிபுரிந்த நாங்ஹாடி (கப்டன்) இமாம் வகூதீன் (பிரதம பொறியியலாளர்) ஆகிய இரு இந்தோனேஷியப் பிரசைகளும் திரும்பி வருவதற்கு வசதி செய்தது. மாலுமிகள் குழுவைச் சேர்ந்த இந்த இருவரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளால் பாதுகாப்பாக 4-7-97 மாலையில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

மாலுமிகள் குழுவைச் சேர்ந்த மிகுதி ஏழு பேர்களினதும் நிலைமை குறித்து குழு மிகவும் கவலை அடைந்துள்ளது. அவர்களை இயன்றளவு விரைவில் பார்வையிடுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் குழு மேற்கொண்டு வருகிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு 1989 ஆம் ஆண்டு தொடக்கம் ஸ்ரீலங்காவில், தடுப்புக்காவலில் உள்ளவர்களைப் பாதுகாத்தல், குடும்பத் தொடர்புகளை மீள அமைத்தல், பொதுமக்களுக்கு உதவிகளைச் செய்தல், போரின்போது அதில் ஈடுபடுவோர் நடந்து கொள்ள வேண்டிய விதிகளைச் சம்பந்தப்பட்டோருக்குப் புகட்டுதல் ஆகிய தனது பாரம்பரிய மனிதாபிமான சேவைகளை ஆற்றி வருகிறது.

தேவை ஏற்படும் போதெல்லாம் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்புகளுக்கிடையிலும் பக்கச் சார்பற்ற நடுவராகப் பணிபுரிந்தும் சேவையாற்றி வருகிறது.— என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# வடக்கு, கிழக்கில் காப்புறுதி வசதி!

வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை ஜனாதிபதிக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து வடக்குக் கிழக்கில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் கலகம், குழப்பம், பயங்கரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் அவை தொடர்பான காப்புறுதிகளை மேற்கொள்ள வசதியாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது;

இந்தக் காப்புறுதி நடைமுறையின் கீழ் ஆகக்கூடியதாக ஒரு கோடி ரூபா வரை காப்புறுதி செய்து கொள்ளலாம்.

தீ, வாகனங்கள், பொது, கடல் காப்புறுதி என நான்கு வகைகளில் காப்புறுதியை மேற்கொள்ளலாம்.

வங்கிகளில் இருந்து கடன் பெற்று கட்டப்பட்ட கட்டடங்கள், இயந்திரங்கள், பொருள்கள் ஆகியன தொடர்பாக ஒரு கோடி ரூபா வரை காப்புறுதி செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிப்பாய்கள் காயம்

நெல்லியடியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் படையினர் மீது சிறு ஆயுதங்கள் மூலமும் கிளைமோர் கண்ணி ஒன்றை வெடிக்க வைத்தும் மேற்கொண்ட தாக்குதலில் இரு சிப்பாய்கள் உயிரிழந்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

இத்தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்திருக்கலாம் என ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்களை மேற்கோள்காட்டி நேற்றைய சஞ்சீவியில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

(உ-5)

# சமய சந்நிதிகளில்

திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் புதிய சித்திரத் தேர்களின் வெள்ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

அனலைதீவு நயினாகுளம் ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் தேவஸ்தான மகா கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நாளை காலை 8.00 மணி முதல் நடைபெறும். (உ-117)

★ ★ ★

யாழ். மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகதின விழா இன்று காலை 9-00 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். விசேட வசந்த மண்டபப் பூசை நடைபெற்று விநாயகர் வீதியுலா வருதலும் இடம் பெறும். (ஐ-4)

★ ★ ★

அரியாலை மதிப்பங்குளம் ஸ்ரீ ஞானவைரவர் கோயிலின் மஹாகும்பாபிஷேகம் இன்று காலை 7-00 மணிக்கு நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி கோயிலில் பிராயச்சித்த அபிஷேகம் இன்று ஞாயிறு முற்பகல் 11-00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

கரணவாய் மூத்த விநாயகர் கோயில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டத் திருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு நடைபெறும்.

சித்திரத் தேரை வடிவமைத்த சிற்பாசாரியார் ஆ. ஜீவரத்தினம் ஸ்தபதி விழாவில் கௌரவிக்கப்படுவார்.

# வன்னியிலே எழுந்தருளி மக்களுக்கு அருள்பாலிக்கும் மடு மரியன்னை

பூங்குயில்கள் இசை கொஞ்ச பொன்னிப்புனல் பாலபொங்க
தேங்குவளைப் பொய்கையிலே வான்கிளைகள்
ஓங்கு கொம்பு மந்தியினம் பந்தடித்துக் கனி சிந்த
தீங்குகள் எல்லாம் நீங்கிச் சீலமுடன் ஞாலமுய்ய
ஏங்கும் உள்ளங்களின் இருளருகி ஒளிபெருக
பாங்குடனே வண்ணமயில் நடனமிட; வன்னி மண்ணின்
மாவனப்புக் கானகத் தா(ய்)ல் மருதமடு அன்னை எழுந்தாள்!

வானோரும் வணங்கிடும் ஞானமனோகரியாம் கானகச் செல்வி மருதமடுச் செபமாலை மாதா, தேன் பருகி மான்மருளும் பவளமணிக் குஞ்சரம் சூழ் கானகத்தாலெழுந்து, அடியவர்க்குத் திருவருள் பாலிக்கும் புனித நாள் கடந்த புதன்கிழமையாகும். அன்னையின் கட்டழகு வதனம் கண்டால் கல்லும் கனியாகும்; முள்ளும் மலராகும்; களனியும் கவினும் கவி புனைந்து பண்பாடும். மருத மடுவில் வாழும் இந்த செபமாலை அன்னை யார்? புனித மரியன்னை தான் மருதமடு அன்னை.

இந்த மரியன்னை விண்ணகத்தின் ஒளி எனவும் அண்டினோர்க்கு அபயமெனவும் ஏழை எளியோரின் தஞ்சம் எனவும் வாக்குறுதியின் பேழை எனவும் மனுக்குலத்தாற் பூஜித்து வணங்கப்படுகின்றாள். ஆதி, மத்தி, அந்தமெல்லாம் கடந்துள்ள தூய பரம்பொருள் மரியன்னையை ஒரு கருணை மாமழை மேகமாகவும் தாய்மையின் சிகரமாகவும் மனித குலத்திற்கு அளித்துள்ளார்.

தனது ஒரே பேறான குமாரனை உலகிற்கனுப்பி, உலக மீட்புக்காக வதைப்பட்டு, சிலுவை ஏறி உயிர் விடச் சித்தமான குமாரனை, இரட்சிப்பின் செம்மலை மனுவுருவெடுத்து பிறக்கச்செய்வதற்கு, தாவீது அரச குலத்தவளும், தூய்மை, பொறுமை, தாழ்மை, கற்பு ஆகிய புனித பண்புகள் அணிகலன்களாகக் கொண்டிலங்குபவளுமாகிய புனித மரியாளின் திருவுதரத்தைத் தேர்ந்தெடுத்தார்,

தனது உதரத்தில் மனிதனாகி அவதரித்த தேவகுமாரனுக்காக, புனித மரியாள் அளவு கடந்த வேதனைகளையும் சோதனைகளையும் தாங்கிக் கொண்டாள். நல்ல மனத்துடன் ஏற்றுக் கொண்டாள். இறை சித்தம் எப்படியோ, அப்படியே ஆகட்டும் என்று யாவற்றையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டாள். மரியன்னை மனுக்குலத்திற்காக இறைவனிடம் பரிந்துரை பேசி வருகின்றாள். இதனால் உலகில் வாழும் கோடிக்கணக்கான மக்கள் — கத்தோலிக்கர் அல்லாதோரும்—மரியன்னையை தங்களின் மாதாவாகவும் பாதுகாவலியாகவும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பிரான்ஸில் லூட்ஸ்சும், மெக்சிக்கோவில் குவாடலுபேயும், போத்துக்கலில் பத்திமாவும், இங்கிலாந்தில் வால்சிங்ஹோமும், இத்தாலியில் லொரட்டாவும், ஜேர்மனியில் கனாக்கும், இந்தியாவில் வேளாங்கன்னியும், இலங்கையில் மருதமடுவும், உலகப்புகழ் வாய்ந்த தேவாலயங்களாகி மரியன்னையின் பக்தியை இயம்பி நிற்கின்றன.

### ஞாயிறு நற்பிரசாதம்

எமது இலங்கைத் திருநாட்டிலே மானும் புலியும் வேழமும் வேங்கையும் அரடியும் பாம்பும் கலந்துறவாடும் வன்னிக்காட்டிலே மதுரம் பொழியும் மருதமடு என்னும் கிராமத்திலே கோயில் கொண்டுள்ளாள் புனித மரியன்னை. இதனால் மடு மாதா என்று அழைக்கப்படுகின்றாள். வன்னிக்காட்டிலே எழுந்தருளி அடியார்களுக்கு இரங்கி வருகின்றாள்.

எமது திருநாட்டில் வாழுகின்ற நான்கு மறைகளைச் சார்ந்த மக்களும் மடுமாதாவின் மீது மிகுந்த பக்தி வைத்துள்ளனர். தாயிடம் பிள்ளை முறையிடுவதைப் போன்று கண்ணீர் மல்க கரங்களைக் குவித்து விண்ணப்பம் செய்யும் காட்சி எந்தவொரு கல்லான இதயத்தையும் உருக்காமல், தொடாமல் விட முடியாது. நாட்டின் பிரச்சினையால் இன்று யாத்திரிகர்களின் வருகையும் கலகலப்பும் குறைந்து போயினும் அன்னையின் அருளும் திருச்சேத்திரத்தின் பொலிவும் மங்கிவிடவில்லை.

யுத்தத்தின் கொடுமையினால் சொந்த ஊரை, உடைமைகளை, உயிர்களை, உரிமைகளை இழந்து அநாதைகளாக்கப்பட்டு மடு மாதாவின் திருநிழலில் ஆறுதலும் அடைக்கலமும் பாதுகாப்பும் தேடிப்போய் நிற்கின்றனர் மக்கள். அவர்களுக்குத் தேறுதலும் காவலும் அருளிப் பாதுகாத்து வருகின்றாள் அன்னை.

'பொழுது புலரும் பொற்காலம் மலரும் எம் இக்கோலம் உலரும் என்றே
தொழுது துயரகலத் தூய பரமனை இரந்திறைஞ்சி
அழுது அயர்வடையும் அகதிகளின் அருள் விளக்காய்!'

விழுதுகொடுத்துதவும்விருட்சம் போல விளங்குகின்றாள்!

மருதமடுமாதாவின் திருவடியில் தஞ்சமடைந்த எம் தமிழ் மக்களினம் அவளது பேருதவியை என்றுமே மறந்து விட முடியாது.

அம்மா தாயே! உமது சந்நிதானந்தேடி வந்து உமது கமல இதழ் வதனத்தைக் கனிவுடன் கண்ணுற்று பெருமூச்சு விடுகின்றோம்—எங்கள் வேண்டுதல் மறுக்கப்படுமோ? எங்கள் அழுகுரல் உமது உள்ளத்தை என்றும் உருக்காது போகுமோ? எங்கள் அன்பான திருச்செபமாலை அம்மா! நீர் நினையாவிட்டால் எங்களை வேறார் நினைப்பார்? நீர் உதவா விட்டால் எங்களுக்கு வேறார் உதவுவார்? எங்களைக் கருணைக் கண் கொண்டு பாரும். எங்கள் நாட்டைப் பீடித்துள்ள யுத்தம் என்னும் கொடிய நோயை அகற்றி உண்மையான சமாதானத்தை எங்களுக்குப் பெற்றுத்தாரும். எனறும் போல உமது இடைவிடாத அன்பிலும் அடைக்கலத்திலும் உதவியிலும் எங்களைப் பாதுகாத்தருளும். மருதமடுமாதாவே! ஆமென்!

— உடுவில்: தே. ச. வின்ஸன்

(மடுமாதா திருநாள்கடந்த புதன்கிழமையாகும். அதனை யொட்டி இக்கட்டுரை இன்றைய ஞாயிறு நற்பிரசாதத்தில் பிரசுரிக்கப்படுகின்றது)

### நாளை

**ஆனி 25**

**திங்கட்கிழமை**

திதி: திருதியை
பின்இரவு 4.21 வரை.
நட்சத்திரம்: பூசம்
காலை 6.26 வரை.
சுபநேரம்: 11.58 - 1.28
ராகுகாலம்: 7.28 - 8.58
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலைக்கு மீண்டும் பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். நகரில் இருந்து புதிய பஸ் சேவைகள் கடந்த புதன் கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

782 இலக்கப் பாதையில் குளப்பிட்டி — ஆனைக்கோட்டை ஊடாக சுழிபுரத்துக்கும்—

769 இலக்கப் பாதையில் மல்லாகம் ஊடாக இளவாலைக்கும்—

789 ஆம் இலக்கப் பாதையில் அராலி — சித்தன்கேணி ஊடாக பண்டத்தரிப்புக்கும் —

789 ஆம் இலக்கப் பாதையில் அராலி — சித்தன்கேணி ஊடாக மாதகலுக்கும் பஸ் சேவைகள் இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எம். பி. ...

(முதலாம் பக்கத் தொடர்)

டணியில் அதிக விருப்பு வாக்குகளை — 22 ஆயிரத்து 409 வாக்குகள் — பெற்று அ. தங்கத்துரை எம்.பியானார்.

அவரின் மரணத்தை அடுத்து விருப்பு வாக்குகளின் வரிசையில் அடுத்ததாக உள்ள — 19 ஆயிரத்து 525 வாக்குகளைப்பெற்ற—இரா. சம்பந்தன், தங்கத்துரையின் இடத்துக்கு புதிய எம்.பியாகப் பதவியேற்க அழைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தங்கத்துரை தமது எம்.பி. பதவியை சம்பந்தருக்கு விட்டுக்கொடுக்கவேண்டும் என்று கூட்டணியின் திருகோணமலை மாவட்டக் கிளை வற்புறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இராணுவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

மன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட ஒருவருக்கு 10 ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டு அவர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)


## விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

★ [F] போல்க்கள்ரக – அமோனியம் சல்பேற் உரம் சில்லறை விலை (50 கி. கி) ரூ. 745/-

★ கோல்ட்மன்ரக - ரின் மீன் வகைகள் வியாபாரிக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விசேட கழிவு உண்டு.

**M. L & CO.**

235, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பிரதிநிதிகள்: ஈஸ்வரன் பிறதேர்ஸ்

(48223)



**A/L, O/L, 3, 4, 5, 6, 7, 8, 9, 10**

**ஆண்டு 5 புலமைப்பரிசில்**

வகுப்புகளுக்கான பயிற்சிகளை

யாழ்ப்பாணம்: BOND கல்வி நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சி: திரு. சற்குணராஜா (ஆசிரியர்)

S. றோணியோ - வியாபாரிமூலை.

தென்மராட்சி: சிவன் மெடிக்கல் & புத்தகசாலை

கச்சாய் வீதி, சாவகச்சேரி.

வலிகாமம் மேற்கு: திரு. ஐங்கரன் (ஆசிரியர்)

மே/பா Dr. சதாசிவம், சித்தன்கேணி.

ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைப் பகுதி **BOND INSTITUTES**

(48239) யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

திருமதி

பொன்னுத்துரை சிவபாக்கியம்

நல்லூரைச் சேர்ந்த திருமதி பொன்னுத்துரை சிவபாக்கியம் 5-7-1997 இல் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற செல்வராசா, மகேஸ்வரி, நாகேஸ், லீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கேசவன், கமலா, ரவி, ரஜனி, மோகன், பத்தன், ரஞ்சனா, யமுனா, யோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 6-7-1997 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன்னுத்துரை (கணவன்)
ரகு (மருமகன்)

393/34, கோயில் வீதி,
நல்லூர்.

(48225)

**மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்06-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## முக்கோண பேனா நண்பர் திட்டம்

கொழும்பு, ஜூலை 6

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள 14 வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமிகளை ஒன்றிணைக்கும் நோக்கில் ஸ்ரீ லங்கா இளைஞர் மன்றம் முக்கோண பேனா நண்பர் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இப்பேனா நண்பர்கள் திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரும் வடக்கு — கிழக்கைச் சேர்ந்த சிறுவர்கள் தெற்கில் உள்ளவர்களைத் தெரிவு செய்து ஆங்கிலத்தில் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இயலாத பட்சத்தில் தமிழ் மொழியில் அனுப்பினால் ஸ்ரீ லங்கா இளைஞர் மன்றத்திலுள்ள மாமா, மாமியர் அதனை மொழிபெயர்த்து உங்கள் நண்பர்களுக்கு அனுப்புவார்கள்.

இதில் சேரவிரும்புபவர்கள் முத்திரை ஒட்டப்பட்ட சுய விலாசமிடப்பட்ட தபால் உறையை சமன் அமரசிங்க தலைவர். பணிப்பாளர் சபை, ஸ்ரீ லங்கா இளைஞர் மன்றம் இல 50 ஹெக் றோட், கொழும்பு - 4 என்ற விலாசத்திற்கு அனுப்பி விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ லங்கா இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடன் ''அம்பே யாலுவே பவுன்டேஷன்'' என்ற பிரிவு பேனா நண்பர்கள் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

உறுப்பினர்களாக சேர்பவர்களுக்கு சிங்களத்தைக் கற்பதற்கு கற்கை நெறி நூல்கள் இலவசமாக அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## வீர மக்கள் தின கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

புளொட் அமைப்பினால் அனுஷ்டிக்கப்படும் வீர மக்கள் தினம் தொடர்பாக வெகுஜன அமைப்புக்களினதும், தொழிற்சங்க அமைப்புக்களினதும், பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வெகுஜன மற்றும் தொழிற்சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளை இதில் கலந்து கொள்ளுமாறு 'புளொட், அமைப்பினர் கேட்டுள்ளனர்.

## கப்பல் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்)

யில் ஈடுபடும் 'தாரகி' கப்பலின் கப்டனும் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாருக்குச் சென்றிருந்த 'தாரகி' கப்பல் அங்கிருந்து நேற்றுத் திருமலை சென்றடைந்தது. ஆனால் கப்பல் அங்கு சென்றடைந்ததும் கப்பலின் கப்டன் உடனடியாகக் கொழும்பு பயணமானார்.

இதனிடையே —

கப்பல் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்காக ஐந்நூறுக்கு மேற்பட்ட பயணிகள் இரண்டாவது நாளாக நேற்றும் திருமலை பட்டணமும் சூழலும் பிரிவு பிரதேச செயலர் அலுவலகத்தில் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

கப்பல்சேவை இடம்பெறும் என எதிர்பார்த்து நேற்றுக் காலை முதல் பிற்பகல் வரை பயணிகள் காத்திருந்தனர். ஆனால் கப்பல் சேவை நடைபெறமாட்டாது என்று நேற்று பிற்பகல் 1. 30 மணியளவில் பிரதேச செயலகத்துக்கு தகவல் கிடைத்தது. அதனையடுத்து பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

பயணிகளை நகரிலிருந்து சீனன்குடா இறங்குதுறைக்கு ஏற்றிச் செல்வதற்காக இரண்டு பஸ் வண்டிகளும் அங்கு தயாராக நின்றிருந்தன. (உ-ஐ-150)

# தாய்லாந்து படகை தேடி வேட்டை!

ஆஸ்திரேலியாவின் மேற்குக்கரைப் பகுதியில் 15 இலங்கைத் தமிழர்களை சட்டவிரோதமாக இறக்கி விட்ட தாய்வான் படகு ஒன்றைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சிகள் நடைபெறுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் படகைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியாக ஆஸ்திரேலிய விமானங்கள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ரோந்தில் ஈடுபட்டதாக பேர்த் நகரில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது ஆஸ்திரேலியாவில் தடுப்பு முகாம் ஒன்றில் தங்கியுள்ள இந்தத் தமிழர்களின் விவரங்களைப் பெற்றுக் கொள்ள கன்பெராவில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி தெரிவித்தது. (ஐ)

# மெய்வல்லுநருக்கு பயண அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

திருகோணமலையில் நடைபெறும் வடக்கு — கிழக்கு மாகாணப் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றும் யாழ். கல்வி வலயம் 1 ஐச் சேர்ந்த மெய்வல்லுநர்கள், அவர்களின் அனுசரணையாளர்கள், அலுவலர்கள் போன்றோரை திருகோணமலைக்குச் செல்வதற்கான ஆயத்தங்களுடன் நாளை காலை 7 00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கல்வி வலயம் 1இன் அலுவலகம் கேட்டுள்ளது.

கப்பல் பயணம் பற்றிய தகவல்கள் குழப்பம் காணப்பட்டாலும் கூட மேற்படி போட்டியில் பங்குபற்றச் செல்லும் 206 பேரையும் தவறாது நாளை சமுகம் கொடுக்கும்படி யாழ்.வலயம் 1 கல்வி அலுவலகம் கேட்டுள்ளது.

இதற்கிடையில் —

நேற்று மாலை கொழும்பிலிருந்து திருகோணமலைக்குத் திரும்பிய வடக்கு — கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சு. டிவகலாலாவிடம் மெய்வல்லுநர்களின் கப்பல் பயண ஏற்பாடுகளில் உள்ள சிக்கல்கள் குறித்துத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

உரிய அதிகாரிகளுடன் கதைத்து, கப்பல் பயண வசதியை ஏற்படுத்திக் கொடுக்கத் தாம் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக நேற்றிரவு அவர் தெரிவித்தார்.

யாழ். கல்வி வலயம் 2 சார்பில் போட்டிகளில் பங்குபற்றும் மெய்வல்லுநர்களின் விவரம் (Entries) இன்னும் மாகாணக் கல்வி அமைச்சுக்குக் கிடைக்கவில்லை என்றும்—

நாளை மாலைக்கு முன்னர் அவை திருகோணமலைக்குக் கிடைக்காவிட்டால் யாழ். கல்வி வலயம் 2 இன் மெய்வல்லுநர்களைப் பங்குபற்ற அனுமதிக்க முடியாத நிலை ஏற்படும் என்றும்—

செயலாளர் டிவகலாலா உதயனுக்கு நேற்றிரவு தெரிவித்தார். (உ)

## திருமலை எம். பி...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று மாலை பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா இடம் பெற்றது. அந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை கலந்து கொண்டு உரையாற்றினார்.

பின்னர் அந்நிகழ்ச்சியில் மேடையில் அமர்ந்திருந்த பிரமுகர்களுக்கு தனியான தேநீர் விருந்துபசாரம் இடம் பெற்றது.

அதை முடித்துக் கொண்டு பாடசாலையை விட்டுப் புறப்பட்ட எம். பி. தங்கத்துரையை பாடசாலை அதிபரும் ஏனையோரும் பாடசாலை வாசலை நோக்கி அழைத்து வந்து கொண்டிருந்தனர்.

பாடசாலை வாசலை அண்மித்த சமயம் திடீரென கிரனேட் ஒன்று வீசப்பட்டதாகவும், வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

முதலில் ஒரு குண்டு வெடிப்புச் சத்தமும் அதைத் தொடர்ந்து ஆறு, ஏழு வேட்டுக்கள் தீர்க்கப்படும் சத்தமும் கேட்டதாக பாடசாலை சுற்றாடல் வாசிகள் தெரிவித்தனர்.

எம். பி. தங்கத்துரையும், பாடசாலை அதிபர் திருமதி இராஜேஸ்வரி தனபாலசிங்கமும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். சுமார் பதினைந்து பேர்வரை காயமடைந்தனர்.

கட்டடத் திறப்பு விழாவுக்காக அலங்கரிக்கப்பட்டு அழகாகக் காட்சியளித்த பாடசாலை முன்றல், ஓரிரு விநாடிகளில் ரணகளமானது.

காயமடைந்த பதினைந்து பேரில் இருவர் பாடசாலை மாணவிகளாவர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

காயப்பட்டவர்களில் திருமதி நடராசா, சூரியரத்தினம், சிவகுமார், ஜீவரத்தினம், மிகிரியா, இராமநாதன், சந்திரகாந்த் ஆகியோரின் பெயர்களும் அடங்கியிருந்தன.

காயமுற்ற திருகோணமலைக் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் இரட்ணராஜா கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் —

அவரை அவசர மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்கு அனுப்பும் முயற்சியில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா ஈடுபட்டிருப்பதாகவும் —

ஒரு தகவல் தெரிவித்தது.

நேற்றைய கட்டடத் திறப்பு விழாவில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். ஆனால் பிரதம விருந்தினரை வாசல் வரைக்கும் சென்று வழியனுப்பும் நிகழ்ச்சியில் சொற்ப எண்ணிக்கையினரே கலந்து கொண்டதால் உயிரிழப்பு மற்றும் பாதிப்புகள் அதிகரிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதம விருந்தினருக்கு தேநீர் அளித்த வைபவத்தில் திருகோணமலை நகர சபைத் தலைவர் சூரியமூர்த்தி, திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் தண்டாயுதபாணி, பொறியியலாளர் தவசலிங்கம், திருகோணமலைக் கல்விப் பணிப்பாளர் ஆரியசேன ஆகியோர் கலந்து கொண்டனராயினும்—

தேநீர்உபசாரத்தைமுடித்த பின்னரும் பாடசாலை அதிபர் மற்றும் சில பிரமுகர்களுடன் எம். பி தங்கத்துரை கதைத்து கொண்டிருந்ததால் ஏனையோர் அவரை விட்டு விட்டு அங்கிருந்து புறப்பட்டதாகக் கூறப்படுகின்றது

இந்தப் பிரமுகர்கள் வெளியேறி ஓரிரு நிமிடங்களில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

மேற்படி கட்டடத் திறப்பு விழா பற்றிய செய்திகளைச் சேகரிக்கச்சென்ற உதயனின் திருகோணமலைச் செய்தியாளர் உட்பட பத்திரிகையாளர்கள் அனைவரும், திறப்பு விழா மற்றும் கூட்டம் முடிவுற்றவுடனேயே பாடசாலையை விட்டுப் புறப்பட்டதால் இந்த அனர்த்தத்தில் சிக்காது தப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org